Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

தபாற் பெட்டி எண் : 49
போன் 389

National Tamil Daily

மலர் 9
இதழ் 161
தேசிய தினசரி

[illegible] பிலவங்க ஆடி 6 ரபி ஆகி. 13 சனிக்கிழமை [22-7-67]

# துப்பாக்கி முனையில் கள்ளத்தோணிகளென கைது

## பின்னர் விடுதலை

வல்வெட்டித்துறை, வெள்ளி

துப்பாக்கி முனையில் படுமோசமாகத் தாக்கப்பட்டார்களாம் வல்வெட்டித்துறையைச்சேர்ந்த ஐவர். இவர்களை கள்ளத்தோணிகளென கைதுசெய்த பருத்தித்துறை சுங்க இலாகவினர் விசாரணைக்கு பின்னர் விடுதலை செய்தனர்.

கடந்த இரவு வல்வெட்டித்துறையைச் சேர்ந்த மதனசுந்தரம், தாமோதரம்பிள்ளை, தேவன், குட்டித்துரை, சின்னண்ணு ஆகியோர் தொண்டமனறு கடற்கரையில் மீன்பிடித்துவிட்டு மயிலிட்டியில் கொண்டுபோய் கொடுத்துவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த சமயம் மயிலியதனைக் கண்மையில் கடற்கரையில் வைத்து கள்ளத்தோணி என்றும் கள்ளக்கடத்தலில் ஈடுபட்டிருந்தவர்கள் என்றும் கருதி சந்தேகத்தின்மீது வள்ளத்தில் சென்று கொண்டிருந்தவர்களை பருத்தித்துறை சுங்க இலாகாவினர் துப்பாக்கி காட்டி பயமுறுத்தி, கைது செய்தனராம். அவர்கள் கொண்டுசென்ற உணவுப்

[6-ம்பக்கம் பார்க்க]

# அரசாங்க ஊழியரின் சம்பளம் உயரும்

## ஆனல் புதிதாக எவரும் எடுக்கப்படமாட்டார்கள்

### டாக்டர்களுக்கும் அரசாங்க சேவையில் இடமில்லை

கொழும்பு, வெள்ளி

அரசாங்க சேவைக்குப் புதிதாக ஆட்களை எடுப்பதைக் குறைத்து இப்போதுள்ள அரசாங்க ஊழியரின் சம்பளத்தை அதிகரிக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளதாகவும் இதுபற்றிய அறிவிப்பு புதிய வரவு-செலவுத் திட்டத்தில் இடம்பெறுமென்றும் அறியப்படுகிறது.

நிர்வாகச் செலவுகளைக் குறைப்பது பற்றிய விபரங்களும் வரவு-செலவுத் திட்டத்தில் வெளியிடப்படுமெனத் தெரியவருகிறது.

அரசாங்க இலாகாக்கள் பலவற்றில் அரசாங்க ஊழியர் அளவுக்கு அதிகமாக இருப்பதாக அரசாங்கம் கருதுகிறது. இதனுல் புதிதாக அரசாங்க சேவைக்கு ஆட்களை எடுப்பதை நிறுத்தி அல்லது குறைத்து இப்போதுள்ள அரசாங்க ஊழியரின் சம்பளத்தை அதிகரிக்கலாமென அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

டாக்டர்களாகப் படித்து வெளியேறுபவர்கள் அனைவருக்கும் அரசாங்க ஆஸ்பத்திரிகளில் வேலைகொடுக்கும் நிலையில் அரசாங்கம் இல்லையென்றும் அறியப்படுகிறது.

நேற்றிரவு கொழும்பில் குடும்பக் கட்டுப்பாட்டுக் கழகத்தில் நடைபெற்ற ஒரு வைபவத்தில் சுகாதார அமைச்சர் திரு. எம். டி. ஜயவர்த்தன பேசுகையில் புதிய டாக்டர்களுக்கு ஆஸ்பத்திரிகளில் வேலைகொடுக்கும் நிலையில் அரசாங்கம் இல்லையென்பதை சூசகமாகத் தெரிவித்தார்.

கூட்டுறவு முறையில் வைத்தியசாலைகள் ஆரம்பிப்பதற்கும், தனிப்பட்ட முறையில் வைத்தியசாலைகள் தொடங்குவதற்கும் அரசாங்கம் உதவியும், ஊக்கமும் அளிக்குமென்பதையும் அமைச்சர் தெரிவித்தார்.

மருந்துகள் மற்றும் வைத்தியசாலைகளுக்கான பொருட்களை இறக்குமதி செய்வதற்கு வசதியும், வரிச் சலுகையும் அளிக்க [illegible]

# மாவட்டசபை வகுப்பு வாதத்தைக் கிளப்பும்

## சுதந்திரக் கட்சி மகாநாட்டில் தீர்மானம்

காலி, வெள்ளி

அரசாங்கத்தின் உத்தேச மாவட்டசபை நாட்டின்பல்வேறு இன மக்களிடையே ஒற்றுமையின்மையையும், வகுப்புவாதக் கிளர்ச்சியையும்ஏற்படுத்துவதற்குஉதவி செய்யும் விதத்தில் அமைந்திருப்பதால் அதனை வன்மையாகக் கண்டித்து எதிர்க்கவேண்டுமென்ற தீர்மானம்நேற்று இங்கு ஆரம்பமான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

மகாரா எம்.பி எஸ். கே. கே. சூரியாராச்சி இந்தத் தீர்மானத்தைபிரேரித்தார். தம்பதெனியா எம். பி. ஆமோதித்தார்.

ஆசிரியர்களைவேலை நீக்கம் செய்தும், அவர்களுடைய பதவி உயர்வு, சம்பள உயர்வு ஆகியவற்றை நிறுத்திய அரசாங்கத்தின் பழிவாங்கும் செயலைக்கண்டிப்பதென்றும், மீண்டும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பதவிக்கு வந்தால், பழிவாங்கப்பட்ட ஆசிரியர்களின் பறிக்கப்பட்ட உரிமைகள் மீண்டும் வழங்கப்படுமென்ற தீர்மானமும் மகாநாட்டில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

பார்லிமெண்டில் நிறைவேற்றப்பட்டுள்ள இலங்கை-இந்திய ஒப்பந்த அமுல் மசோதாவையும்கண்டிக்கும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது, இந்த மசோதா இலங்கை மக்களுக்குபயன்தராததாகஇருப்பதால், ஸ்ரீமா-சாஸ்திரிஒப்பந்தத்தையே அமுல்படுத்த வேண்டுமென்று அரசாங்கத்தை இத்தீர்மானத்தில் கோரியுள்ளது.

தேசிய அரசாங்கத்தின் அரிசி வெட்டைக் கண்டிக்கும் தீர்மானமும் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

விலைவாசி உயர்வைக் குறைப்பதற்கு அரசாங்கம் தவறிவிட்டதென்றும், பட்டதாரிகளினதும், எஸ். எஸ். சி. படித்துவிட்டு வேலையில்லாதிருப்போரினதும் வேலையில்லாத் திண்டாட்டத்தை போக்க வில்லையென்றும் அந்தத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கதிர்காமத்தில் மெய் சிலிர்க்கும் திருக்கூத்து

## தீ விபத்தில் ஐவருக்கு காயம

கதிர்காமம், வெள்ளி

கதிர்காமத்தில் நேற்றுமுன் தினம் காலை தீ மிதிப்பின் போது ஐவர் படுகாயமடைந்தனர். காயமடைந்த இரு பெண்கள், இரு ஆண்கள், ஒரு குழந்தையும் கதிர்காமம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

பக்தகோடிகளின் பக்திப் பரவசம் கதிர்காமக் கந்தனின் திருத்தலத்தில் தினமும் மெய்சிலிர்க்கச் செய்கிறது.

கந்தன் மீது அளவுகடந்த அன்பு வைத்து, அவனுல் ஆட்கொள்ளப்பட்ட பக்தர்கள் தம்மை மறந்து திருக்கூத்தாடும் பக்தி 'வெறி'க் காட்சிகளும், கண்ணீர்வடித்துத் தம் குறை நீக்கும்படி கந்தனிடம் கதறி அழுது விழுந்து புரளும் காட்சிகளும் தினமும் மனதை உருக்குகின்றன.

பக்தகோடிகளின் மத்தியில் 'ஜேப்படிக்காரர்களும் திருடர்களும் நடமாடத்தான் செய்கிருர்கள். ஆனல் இவர்களைக் கண்காணிக்கப் பொலிசார் சகல பாதுகாப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளனர்.

கதிர்காமத்தில் சில மாதங்களாகத் தொடர்ந்து நிலவும் புழுதிக்காற்றின் வேகத்தைக் குறைக்கும் நோக்குடன் அம்பாறை தீயணைக்கும் படையினர் வீதிகளில் நீர் தெளித்துப் புழுதிக் காற்றை ஓரளவுக்குக் கட்டுப்படுத்தியுள்ளனர்.

# குடும்பக்கட்டுப்பாட்டுக்கு 'டிரான்ஸிஸ்டர்' பரிசு

புதுடில்லி, ஜுலை 22

மூன்று குழந்தைகள் பெற்றவர்களை 'மலடு' ஆக்குவதற்கான குடும்பக்கட்டுத்பாட்டுத் திட்டமொன்றை சுகாதாரமந்திரி திரு. சந்திரசேகர் தயாரித்துள்ளார். இதற்குச் சம்மதிப்பவர்களுக்குடிரான்ஸிஸ்டர்ரேடியோவொன்று பரிசாகக் கொடுக்கப்படுமெனவும் இத்திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்போது 20 லட்சம் பேர் தம்மைக் குடும்பக் கட்டுப்பாட்டுச் சிகிச்சைக்கு உள்ளாக்கியுள்ளனர்.

## மொராஜி தத்துவம்

குடும்பக்கட்டுப்பாட்டுக்கு மனக் கட்டுப்பாடுதான் வேண்டும்' என்று உதவிப் பிரதமர் மொராஜிதேசாய் இங்கு ஒரு கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்துள்ளார். நாட்டின் சகல முன்னேற்றத்திற்கும் குடும்பக்கட்டுப்பாடு அவசியமென்று அவர் சொன்னுர்.

# காலியில் எங்கும் நீலநிறக் கொடிகள்

காலி, வெள்ளி

கடந்த இரவு காலி என்றுமில்லாததுபோல் புதுப் பொலிவுடன் விளங்கியது. நீலநிறக் கொடிகள் வீதிகளெங்கும் பட்டொளிவீசிப் பறந்து கொண்டிருந்தன. வேறு எந்தக் கட்சிகளின் கொடிகளையும் காண முடியாத விதத்தில் எங்குமே நீலநிறம் படர்ந்திருந்தது. சிவப்புக்கொடிகளும் இடையிடையே பறந்துகொண்டிருந்தன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மகாநாடு நேற்று காலி பூஸா குதிரைப்பந்தய திடலில் ஆரம்பமானதைத் தொடர்ந்தே இவ்வித கோலாகலமாக காலிமாநகர் காட்சியளித்தது.

பீகிங் சார்பு கம்யூனிஸ்ட் கட்சியினர் துண்டுப்பிரசுரமொன்றை விநியோகித்தனர். அத்துண்டுப் பிரசுரத்தில், அரசாங்கத்தை முறியடிப்பதற்கு யு. என். பி.க்கு எதிரான சகலரும் ஒன்று சேர வேண்டுமென கேட்கப்பட்டிருந்தது.

# தேசிய புராதன சாஸன நிலையம்

கொழும்பு. வெள்ளி

முன்னைய ஹவ்லொக் குதிரைப் பந்தயத் திடலில் தேசிய புராதன சாஸன நிலையமொன்று அமைக்கப்படவிருக்கிறது.

இதற்காக ரீட் அவெனியூக்கும் டொரிங்டன் அவெனியூக்குமிடையே 4 ஏக்கர் காணி வாங்கப்பட்டுள்ளது.

இந்நிலையத்துக்கான பூர்வாங்கச் செலவுகளுக்கென 1967—68 செலவுத்திட்டத்தில் அரசாங்கம் ரூ.50,000 ஒதுக்கியுள்ளது. மொத்தச்செலவு 32 லட்சத்து 50,000 ரூபாயாகக் கணிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

சந்தேகம் உண்மையைமறைக்கின்றது. இதனால் நண்பர்சள் விரோதத்திற்குள்ளாகின்றனர். சந்தேகம் நண்பர்களையும்இழக்கச் செய்கின்றது. சந்தேகத்திலிருந்து ஒருவன்விலகுவானானால் அவன் வாழ்வில் முன்னேற்றமடைவதுடன் சிறந்த மனிதனாகவும் விளங்குவான். அறியாமைதான் சந்தேகத்தின் அத்திபாரம். சந்தேகம் ஒருவனது வாழ்வில் குறுக்கிடுமானால் அவன் நம்பிக்கை இழந்தவனாவான்.

—சுவாமி சிவானந்தர்

ஈழநாடு

Eelanadu Natioal Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க ௵
ஆடி மீ 6௳ (22 7-67)

## சுதந்திரக் கட்சி மகாநாடு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதினைந்தாவது ஆண்டுமகாநாடு இரண்டு தினங்கள் காலியில் சிறப்பாக நடந்துமுடிந்திருக்கிறது. மகாநாட்டில்கட்சியின் தலைவரான திருமதி சிறிமா பண்டாரநாயகா நிகழ்த்திய தலைமையுரையும் அங்கு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களும் அடுத்ததேர்தலில்வெற்றி பெறும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டதாகவே தோன்றுகின்றன. தேர்தலை எதிர்பாராமல் நாட்டின் இன்றைய நெருக்கடியைத் தீர்ப்பதற்கு, நாட்டு மக்களின் நலனில் அக்கறைஉடைய ஒரு பெரும் ஸ்தாபனம் என்றமுறையில் அது யோசனைகள் எதையும் வெளியிடாததுஒருபெரிய குறையென்று சொல்ல இடமுண்டு சிறுபான்மை சமூகத்தை குறிப்பாக தமிழ் மக்களின் நம்பிக்கையை மீண்டும் பெறுவதற்கான வாய்ப்பையும் இந்த மகாநாடு ஏற்படுத்தத் தவறிவிட்டது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முன்னர் ஆளும் கட்சியாக இருந்தது. இன்று சக்திவாய்ந்த எதிர்க் கட்சியாக அது விளங்குகிறது. ஜனநாயகம் சிறப்புறச் செயல்படுவதற்கு பலம்வாய்ந்த எதிர்க்கட்சி அவசியம். இலங்கையைப்பொறுத்தவரையில் எல்லோரும் ஜனநாயக சோஷலிஸமே தங்கள் கொள்கையென்று கூறிக்கொள்கின்றனர். இது ஒரு நாகரிகமாகவும் வந்துவிட்டது. ஆனால் ஜனநாயகத்தைப் பற்றியும் சோஷலிஸத்தைப் பற்றியும், கொள்ளும் அக்கறையைவிட அடுத்ததேர்தலில் எப்படி வெற்றி பெறலாம், பதவிக்கு எப்படி வரலாம் என்பதில் தான் அதிக அக்கறை கொண்டுள்ளனர். நாட்டின் வருங்காலத்தைப் பற்றியோ எதிர்காலச்சந்ததியினரின் சுபீட்சம் பற்றியோ சிந்திப்பார் இங்கு குறைவு. இதுதான் நமது தீமைகளுக்கெல்லாம் முக்கிய காரணம்,

காலி மகாநாட்டில் திருமதி சிறிமா பண்டாரநாயகா நிகழ்த்திய தலைமையுரையில் இங்கு இன,மத பூசல்களைக் கிளப்பி குழப்பமேற்படுத்த சில 'பிற்போக்கு வாதிகள்' முயற்சிசெய்வதரகவும்தேசிய ஐக்கியத்தை நிலைநாட்ட சகல மக்களும் ஒன்றுபட்டு பிற்போக்குவாதிகளின் முயற்சிகளை முறியடிக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டிருந்தார். இன மத பூசலைக்கிளப்பி குழப்பத்தை ஏற்படுத்த முயலும் பிற்போக்குவாதிகள் என்று திருமதி பண்டாரநாயகாயாரைக்குறிப்பிட்டாரோ தெரியவில்லை இதே மகாநாட்டில்மாவட்டசபைகள் அமைப்பதை எதிர்த்து திரு.ஆர். ஜி சேனநாயகாஒரு பிரேரணையை அனுவதித்து நீண்டநேரம் பேசியிருக்கிறார்.

சென்ற பொதுத் தேர்தலிலும் அதற்குமுன்னைய தேர்தல்களிலும் கூடத் தமிழ்மக்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள ஒரு தொகுதியில்கூட சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் எவரும் போட்டியிடவில்லை. போட்டியிடக்கூடிய முறையில் தமிழ்மக்கள் விஷயத்தில் அந்தக்கட்சி நம்பிக்கையுடன் நடந்துகொள்ளவில்லை. தேசீய ஐக்கியம் பேச்சளவில்இருந்தால் போதாது செயலிலும் இருக்கவேண்டும். காலியில் கூடிய பதினைந்தாவதுஆண்டு மகாநாடாவது தமிழ் மக்களின் நம்பிக்கையையும் பெறக்கூடிய முறையில் நடந்துகொள்ளத் தவறிவிட்டது சுதந்திரக்கட்சிக்கு ஒரு பெரும் குறை என்று சொல்லலாம்.

## மந்திரியை சந்திப்பர்

யாழ்ப்பாணம், சனி

வட இலங்கை கள் இறக்கும் தொழிலாளர் சங்க நிர்வாகசபைக் கூட்டம் கே.ஐ. பூவிலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

வழிப்பாஸ் சம்பந்தமாக தூரத்தைக் கூட்டிப்பெறவும், பொலிசார் தலையீட்டை நீக்கும்படியும் உள்நாட்டுமந்திரியை நேரில் கண்டுபேசுவதெனக் கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டது.

மந்திரியைப் பேட்டிகாண தலைவர்-கே-ஐ. பூவிலிங்கம், பொதுக்காரியதரிசி திரு. எம். சி. சுப்பிரமணியம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். இதற்கரானசெலவை தொழிலாளரிடம் சேர்ப்பதென முடிவு செய்யப்பட்டது.

## 'தமிழ்நாடு' தீர்மானம்

சென்னை, ஜூலை 21

''செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே! தந்தையர் நாடென்னும் போதினிலே ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே!''

இவ்வாறு வயது முதிர்ந்த அங்கத்தினரின் பாட்டுடன் நேற்று முன்தினம் தமிழக மேல் சபையிலும் சென்னை ராஜ்யத்துக்கு 'தமிழ்நாடு' என்று பெயர் வைக்கவேண்டும் என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

சபைத் தலைவர் திரு. எம். ஏ. மாணிக்கவேலு தலைமை வகித்தார்.

## எஸ்.ஜே.வி. இன்று திறந்துவைப்பார்

சுழிபுரம், வெள்ளி

விளான் தபாற்கந்தோர் புதிய தொலைபேசித் தொடர்பை காங்கேசன்துறைத் தொகுதி எம்.பி. திரு.எஸ். ஜே. வி, செல்வநாயகம் நாளை ஆரம்பித்துவைப்பார். இவ்வைபவத்தையொட்டி ஒரு பொதுக்கூட்டம் நடைபெறவும் ஏற்பாடாகியுள்ளது.

# வடக்கில் தொடர்ந்து புதைபொருள் ஆராய்ச்சி

## பல கல்வெட்டுகள் கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், சனி

வடமாகாணத்தில் புதைபொருள் இலாகாவினர் பல இடங்களில் ஆராய்ச்சி நடத்தி வருகின்றனர். கடந்த 50 வருடங்களுக்குப் பின்னர் புதைபொருள் ஆராய்ச்சிப் பகுதியினர் நடத்தி வரும் ஆராய்ச்சியினால் பல கல்வெட்டுக்கள் கண்டெடுக்கப் பட்டுள்ளன.

1917-ம் ஆண்டு கந்தரோடையில் மாவட்ட நீதிபதியாக கடமையாற்றிய சேர் போல் இ. பிரிஸ் ஆராய்ச்சி நடத்திய பிறகு கடந்த வருடம் தொடக்கம் புதைபொருள் ஆராய்ச்சி இலாகா சுறுசுறுப்பாக வடபகுதில் ஆராய்ச்சி நடத்தி வருகிறது.

இந்த ஆராய்ச்சியின் போது யாழ்ப்பாணம் பிரதானவீதியிலுள்ள கட்டடமொன்றில் தமிழ் போன்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டு ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது. யாழ்ப்பாணம் நூதனசாலையிலும் கந்தரோடையில் கண்டெடுக்கப்பட்ட ஒரு கற்சுவடு வைக்கப்பட்டிருக்கிறது. இக்கற்சுவடு 9-ம் நூற்றுண்டைச் சேர்ந்ததென புதைபொருளாராய்ச்சி ஆணையாளர் சாள்ஸ் கொடகும்புற அபிப்பிராயம் தெரிவித்துள்ளார்.

உரும்பராய்ப் பிள்ளையார் கோவிலிலும் பழைய கற்சுவடு ஒன்று இருப்பதாகக் கூறப்படுகிறது. இக்கற்சுவடு பற்றியும் புதைபொருள் ஆராய்ச்சி இலாகா ஆராய்ச்சி நடத்தவிருப்பதாக அறியப்படுகிறது.

யாழ்ப்பாணம் ஒல்லாந்தர் கோட்டையிலும், ஊர்காவற்றுறை கடற்கோட்டையிலும் சரித்திர சம்பந்தமான கல்வெட்டுகள் இருக்கலாமென நம்பப்படுகிறது. ஏற்கனவே திருக்கோணமலை கோட்டையில் ஒரு கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது தீவுப்பகுதிகளிலும், புதைபொருள் ஆராய்ச்சி அதிகாரிகள், கற்சுவடுகள் சம்பந்தமாக ஆராய்ச்சி நடத்தி வருவதாக தெரியவருகிறது.

நயினாதீவு நாகபூஷணி ஆலயத்தில் 12-ம் நூற்றுண்டில் 1-ம் பராக்கிரமபாகுவின் பிரகடனம் வெளியிடப்பட்ட ஒரு கல்வெட்டு இருப்பதாகவும் அதில் தமிழில் சிலாசனங்கள் எழுதியிருப்பதாகவும் கூறப்படுகிறது. [அ. நி.]

## இன்ஸ்பெகடருககு எதிரான வழக்கு

யாழ்ப்பாணம், சனி

தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்ட யாழ்ப்பாணம் பொலிஸ்நிலைய இன்ஸ்பெக்டராகக் கடமையாற்றிய திரு. கந்தையாவுக்கு எதிரர்க பொலிசார் இரண்டு வழக்குகளை தாக்கல் செய்துள்ளனர். இவ்வழக்குகள் அடுத்தமாதம் 1-ம் திகதி யாழ்ப்பாண்ம் மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படவிருக்கின்றன.

சென்றமாதம் இ. போ. ச. ஊழியர் ஒருவரையும் பிரயாணி ஒருவரையும் திரு. கந்தையா தாக்கியதாகச் செய்யப்பட்ட புகாரைத்தொடர்ந்தே பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலின் உத்தரவின் பேரில் இவர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டார்.

நாவற்குழி, யாழ்ப்பாணம் ஆகிய இரு இடங்களிலும்வைத்து இந்த இருவரையும் தாக்கியதென திரு. கந்தையாவுக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ள வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. [ந. நி.]

## அபிப்பிராயம் கோரப்படுகிறது

யாழ்ப்பாணம், திங்கள்

மல்லாகத்திற்கென ஒரு பட்டினசபையை உருவாக்குவது சம்பந்தமாக பொது மக்களின் அபிப்பிராயங்கள் கோரப்பட்டுள்ளன.

தற்பொழுதுள்ள மல்லாகம் கிராமசபையை பிரித்து மல்லாகம் பட்டினசபையென்று ஒரு பகுதியையும், மிகுதியான பகுதியை அளவெட்டி கிராமசபையாக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது பற்றிய அபிப்பிராயம் தெரிவிக்க விரும்புவோர் தங்கள் கருத்துக்களின் இரு பிரதிகளை ஆகஸ்ட் மாதம் 7-ம் தேதிக்கு முன், உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அனுப்பிவைக்கும்படி கோரப்பட்டுள்ளது. (அ. நி.)

## ஆங்கில நாடகப்போட்டி இன்று நடைபெறுகிறது

யாழ்ப்பாணம், சனி

யாழ். பிரதேச கலாமன்றம் நடாத்தும் யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையேயான ஆங்கில நாடகப்போட்டி ஒன்று இன்று மாலை யாழ். நகர மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது. யாழ்ப்பாண மாவட்டத்தில் முதன்முதலாக நடைபெறும் ஆங்கில நாடகப்போட்டி இதுதான் என்பது குறிப்பிடத்தக்கது. இப்போட்டியை இலங்கைக் கலைக்கழகத்தின் ஆதரவுடன் யாழ். பிரதேச கலாமன்றம் நடாத்துகின்றது.

இன்றைய இப்போட்டியில் யாழ். மத்தியகல்லூரி, கன்னியாஸ் திரிகள்மடப் பாடசாலை, தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி ஆகியன பங்கு கொள்கின்றன. வடமாகாண அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகரா, டாக்டர் ரொனி கபிரியல், கலையரசு சொர்ணலிங்கம் ஆகியோர் இப்போட்டிக்கு மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றுவர். [ந. நி.]

## அடம்பன் கொள்ளை ஒருவர் கைது

யாழ்ப்பாணம், சனி

அடம்பனில் இம்மாதம் 12-ந் திகதி இரவு நடந்த கொள்ளை சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஐயாத்துரை குணரத்தினம் என்பவரைப் பொலிசார் நேற்று மன்னார் மாஜிஸ்டிரேட் திரு ஆர். பரமகுரு முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

சந்தேக நபர்கள் சார்பில் புறக்டர் ஏ. அன்ரனி ஆஜராஞர். அணிவகுப்பு நடத்த வேண்டுமென்று பொலிசார் மாஜிஸ்டிரேட்டிடம் கோரினர்.

இம்மாதம் 23-ந் திகதி அணிவகுப்பு நடத்தும்படி மாஜிஸ்டிரேட் உத்தரவிட்டார்.

இக்கொள்ளை சம்பந்தமாக பொலிசார் மற்றும் ஐவரைத் தேடி வருகின்றனர்.

அடம்பனில் இம்மாதம் 12-ந் திகதி இரவு நடந்த கொள்ளை சம்பந்தமாக ஐயாத்துரை குணரத்தினத்தை சந்தேகத்தின் பேரில் பொலிசார் கைது செய்தனர். [அ. நி.]

## நாட்டிலும் நகரிலும்

சோனாவாரி மழை பெய்தாலும் நனைந்து போகாமல் வாசிக்கக்கூடிய ஒரு பத்திரிகை சென்ற 20-ம் திகதி பிரான்ஸ் தேசத்தில் முதன் முதலாகத் தோன்றியிருக்கிறது.

இது சாதாரணமாக நாம் வாசிக்கும் கடுதாசிப் பத்திரிகையல்ல. பிளாஸ்டிக்கினால் அச்சிடப்படும் இந்தப் பத்திரிகை மழையில் நனையாது, வெய்யிலில் உலராது, கிழித்தால் கிழிபடாது.

பத்திரிகை உலகில் தான் எத்தனை புரட்சி, பார்த்தீர்களா! ஆதிகாலத்தில் செய்திகளை ஓர் ஊரிலிருந்து இன்னொர் ஊருக்கு அனுப்புவதற்கு தூதர்களை உபயோகித்தார்கள். இவர்கள் குதிரை மீது ஏறி அச்செய்திகளைக் கொண்டுசெல்வர்.

அச்செய்திகளெல்லாம் கையால் எழுதப்பட்டன.

ஆபிரிக்க தேசத்தில் ஆதிகுடிவாசிகள் செய்திகளை அனுப்புவதற்குப் பெரிய டமாரங்களை உபயோகித்தார்கள். அந்தப் பெரிய மேளங்களில் ஆபத்து நேரும் போது ஒரு விதமாகவும், ஆனந்தம் ஏற்படும் போது ஒரு விதமாகவும், இப்படியே செய்திகளை ஓர் ஊரிலிருந்து பக்கத்திலிருக்கும் மற்றோர் ஊருக்கு அனுப்புவதற்கு உபயோகித்தார்கள்.

17-ம் நூற்றுண்டளவில் ஜெர்மனியில் முதலாவது அச்சுயந்திரம் தோன்றியது. இதனைத் தொடர்ந்து புத்தகங்கள் நூல் உருவமாக வெளிவந்தன.

முதலாவது புதினப் பத்திரிகை எந்த நாட்டில் தோன்றியது என்று திட்டவட்டமாகக் கூற முடியாமலிருக்கிறது. ஒன்றில் ஜெர்மனி அல்லது சீனாவில் தோன்றியிருக்கக்கூடும்.

தமிழில் உதயமான முதற் பத்திரிகை 'சுதேசமித்திரன்' என்றே பொதுவாக நம்பப்படுகிறது. தென்னகத்தில் தோன்றிய இத்தினப் பத்திரிகையில் சுப்பிரமணிய பாரதியாரும் பணிசெய்தார்.

இலங்கையில் மிகப்பழைய புதினப் பத்திரிகை அரசாங்கத்தால் வெளியிடப்படும் 'அரசாங்க வர்த்தமானி' என்ற 'கஸட்' பத்திரிகை. இதற்கு அடுத்தபடியாகப் பத்திரிகை என்ற உருவம் கொண்டது, அமெரிக்க மிஷன் பாதிரிமாரால் ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளிவந்த 'உதய தாரகை.'

உலகத்தில் இன்று பல கோடி புதினப்பத்திரிகைகள் வெளிவருகின்றன. அமெரிக்கக் கண்டத்தில் நகருக்கு நகரம் ஒவ்வொருபத்திரிகை வெளியாகிறது.

1965-ம் வருடம் செப்டம்பர் மாதத்தில் அங்கே1,694 தினசரி பத்திரிகைகள்வெளியிடப்பட்டன. வாரப்பத்திரிகைகள் 566 வெளியாகின.

அமெரிக்காவின் தலைநகராகியநியூயோர்க்கில் வெளியிடப்படும் ஒரு பத்திரிகை 23 லட்சத்து முப்பத்தோர் ஆயிரம் தினமும் விற்பனையாகிறது.

இந்தியாவில், தமிழ்நாட்டிலும் ஒரு பத்திரிகை 20 லட்சத்துக்கு மேல் ஓடுகிறது என்றால் எமக்கு 'ஆச்சரியமாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கிறது.

—வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே. ஆசிய நெருக்கடி தீர்க்கபுதிய அவகாசம்

## ஐ. நா. பொதுச்சபை 24 மணி நேரத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது

நியுயோர்க், ஜூலை21

**ஐ.நா. பொதுச்சபை தனது மேற்கு ஆசியவிவகாரத்தை 24 மணித்தியாலங்களுக்கு ஒத்திவைத்துள்ளது.**

மேற்கு ஆசிய விவகாரத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தீர்க்க, அங்கத்துவ நாடுகளுக்கு அவகாசமளிப்பதற்காகவே சபை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சபையை ஒத்திவைக்கும் பிரேரணையைப்பின்லாந்துப் பிரதிநிதி சமர்ப்பித்தார்.

### தனிமையில் சந்திப்பு

அமெரிக்கப்பிரதிநிதிதிரு. கோல்ட்பேர்க்கும் ரஷ்ய வெளியுறவு மந்திரி திரு. குரோமிக்கோவும் தனிமையில் சந்தித்துப்பேச்சுவார்த்தைகள் நடத்தினர். ஐ நா. சபைப் பொதுக்காரியதரிசியின் விசேஷ பிரதிநிதி ஒருவரை மேற்கு ஆசியாவுக்கு அனுப்புவது பற்றிஇருவரும் ஆலோசித்தனர்.

### இரண்டு அம்சங்கள்

மேற்கு ஆசியா பற்றி ஐ. நா. சபைஏற்றுக்கொள்ளும் எந்தச் சமரசத்தீர்மானமும் இரண்டு முக்கிய அம்சங்கள் பொருந்தியதாக இருக்க வேண்டுமென அங்கத்துவ நாடுகளிடையே பரவலான அபிப்பிராயம் நிலவுகிறது.

அந்த இரண்டு அம்சங்களாவன:

(1) அரபுப் பிராந்தியங்களிலிருந்து இஸ்ரேல்துருப்புகள்வாபஸாகுதல், (2 இஸ்ரேலுக்கெதிரான போர்நிலையைஅரபு நாடுகள் கைவிடுதல்.

## இஸ்ரேல் நெருப்புடன் விளையாடுவதாக எச்சரிக்கை

### ரஷ்யா விடுத்துள்ளது

அரபுப் பிராந்தியங்களிலிருந்து இஸ்ரேல் வெளியேறுவிடில், அதன் விளைவுகளை இஸ்ரேலே அனுபவிக்க வேண்டியிருக்குமென்று சோவியத்யூனியன் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

போர்நிறுத்த உத்தரவை இஸ்ரேல் மீறி வருவதாகவும், தான்பிடித்துள்ள அரபுப் பகுதிகளிலிருந்து அரபு மக்களை விரட்டியடிப்பதாகவும் இஸ்ரேல்மீது ரஷ்யா குற்றஞ்சாட்டியுள்ளது.

'இஸ்ரேல் நெருப்புடன் விளையாடுகிறது' என்று சோவியத் பத்திரிகையான 'பிராவ்டா' எச்சரிக்கை செய்துள்ளது. இஸ்ரேல் நாஸி நடவடிக்கைகளில்ஈடுபடுவதாகவும்அப்பத்திரிகை கூறியுள்ளது.

## ஹொங் கொங்கில் புதிய சட்டங்கள்

ஹொங்கொங், ஜூலை 21

ஹொங்கொங்கில் புதிய அவசரகாலச் சட்டங்கள் அமுலாக்கப்பட்டுள்ளன.

வன்முறைச் செயல்களில் ஈடுபடுவோருக்கு கிரிமினல் வழக்கு மூலம் தண்டனை வழங்கப்படும்.

பொலிசாருக்கு உதவியளிக்குமுகமாவே, புதிய சட்டங்கள் அமுலாக்கப்பட்டுள்ளன.

ஹொங்கொங் துறைமுகத்தில், தொழிலாளர் வேலை நிறுத்தம் நடத்திய போதும், வேலைகள் வழக்கம்போல் நடைபெற்றன.

## நக்ஸல்பாரியில் பொலிஸ் நடவடிக்கை

கல்கத்தா, ஜூலை 21

நக்ஸல்பாரியில், நேபாள எல்லைக்கருகேயுள்ள தீவிரவாதிகளின் ஒரு மறைவிடத்தை முற்றுகையிட்ட பொலிசார் 54 பேரைக் கைது செய்தனர்.

மற்றுமோர் இடத்தில், வேறு பல தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டு பின்னர் 6பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

ஓரிடத்தில் தீவிரவாதிகள் பொலிசார் மீது சுட்டனர் பதிலுக்குப் பொலிசார் சுட்டபோது, தீவிரவாதிகள் காட்டுக்குள் ஓடி மறைந்து விட்டனர்.

## சூயஸ் பகுதியில் அமைதி

சூயஸ்கால்வாய் பகுதியில் நெருக்கடிநிலைமை தளர்ந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அங்குள்ள ஐ.நா. போர் ஓய்வுக்கமிஷனின் தலைவரான ஜெனரல் புல், ஐ.அ. குடியரசினதும், இஸ்ரேலினதும் நடத்தை பற்றித் திருப்தி தெரிவித்துள்ளார்.

போர் ஓய்வைக் குலைக்கக் கூடிய எந்தவொரு அவசர நடவடிக்கையிலும் இறங்க வேண்டாமென்று ஐ. நா. போர் ஓய்வுக் கமிஷன் விடுத்த வேண்டுகோளுக்கு இரு நாடுகளும் செவிசாய்த்துள்ளதாகத் தெரிகிறது.

ஆனாலும், சூஸ்கால்வாயின் கிழக்குக்கரையில் இஸ்ரேல் அதிபார இயந்திர ஆயுதங்களையும் டாங்கிகளையும் குவித்திருப்பதாகச் செய்திகள்தெரிவிக்கின்றன.

## கெயிரோவிலிருந்து சாக்ளா பெல்கிரேட் சென்றார்

இந்திய வெளியுறவுமந்திரி திரு.சாக்ளா கெய்ரோவிலிருந்து பெல்கிரேட்டுக்கு வந்திருக்கிறார். அவர் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியிடமிருந்து யூகோஸ்லாவிய அதிபர் டிட்டோவுக்கு ஒரு செய்தியைக் கொண்டு சென்றுள்ளார்.

முன்னதாக, அவர் கெய்ரோவில் பத்திரிகையாளரின் மத்தியில் பேசுகையில், அரபுப் பிராந்தியத்திலிருந்து இஸ்ரேல் துருப்புகள் வாபஸ் பெறவேண்டுமென கோரும் தீர்மானம் ஐ. நா. சபையினால் ஏற்றுக்கொள்ளப்படாதது துரதிர்ஷ்டமே என்று குறிப்பிட்டார்.

மேற்காசியாவில் எந்தஒரு நடவடிக்கையையும் மேற்கொள்ள முன் முதற்படியாக ஐ நா. சபை, மண்டல சார்பற்ற நாடுகளின் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டியது அவசியமென திரு. சாக்ளாமேலும்கூறினார்

கெய்ரோவில் தங்கியிருக்கையில், ஜனாதிபதி நாஸரையும் மற்றை தலைவர்களையும் திரு சாக்ளா சந்தித்துப் பேசினார்.

## ஆயுத விநியோகம் பற்றி அமெரிக்கா புனராலோசனை

மற்றைய நாடுகளுக்கு, முக்கியமாக மேற்காசியாவுக்கு ஆயுதங்கள் விநியோகிக்கும் கொள்கையை அமெரிக்கா புனராலோசனை செய்யவிருக்கிறது.

மேற்கு ஆசியாவுக்கு ரஷ்யா ஆயுதங்களை அதிக அளவில் விநியோகம் செய்வது, அப்பகுதியில் மீண்டும் போர் ஏற்படவே உதவிசெய்யுமென ராஜாங்க இலாகாப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## திருவனந்தபுரத்தில் மக்கள் அரிசி கோரி ஆர்ப்பாட்டம்

திருவனந்தபுரம், ஜூலை 21

திருவனந்தபுரத்தில் நேற்று ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்ட மக்கள் கற்களை வீசியதால், பஸ் சேவை நிறுத்தப்பட்டுள்ளது.

அரிசி கோரி ஆர்ப்பாட்டம் செய்த மக்கள் கூட்டத்தில், மாணவர்களும் கலந்து கொண்டனர்.

ரயில் ஒன்றை நிறுத்தி, அதிலிருந்த பிரயாணிகளிடமிருந்து அரிசி கைப்பற்றினர். கடைகளை உடைத்தும் அரிசி பறிமுதல் செய்தனர்.

அரசாங்க தஸ்தாவேஜுகளுக்கும் ஆர்ப்பாட்டக்காரர் தீ வைத்தனர்.

## மத்திய பிரதேச அரசியல் நெருக்கடி

### எதிர்க்கட்சி அங்கத்தவர் புதுடில்லி சென்றனர்

போபால், ஜூலை 21

மத்திய பிரதேச காங்கிரஸ் மந்திரி சபையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தொடர்ந்து, எதிர்க்கட்சியினரின் முன்னணி, அரசாங்கம் அமைக்கும் உரிமையைத் தமக்கு அளிக்குமாறு கவர்னரைக்கேட்டுள்ளனர்.

ஆனால்கவர்னர் தற்போது பதவியிலுள்ள முதல் மந்திரியின் ஆலோசனையை ஏற்று மத்திய பிரதேச சட்டசபையைக் கலைத்துவிடத் தீர்மானித்துள்ளதாகத் தெரிய வருகிறது.

இந்த நடவடிக்கையை எதிர்த்து வாதாட எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் புதுடில்லிக்குச் சென்றுள்ளனர். அவர்கள் பிரதமர் இந்திரா காந்தியையும், உள்துறை மந்திரி திரு. சவானையும் சந்தித்துப் பேசுவார்கள்.

### 36 பேர் விலகினர்

மத்திய பிரதேச சட்டசபையில், ஆளும் கட்சியான காங்கிரசிலுள்ள 36 பேர் பிரிந்து போய், எதிர்க்கட்சியில் சேர்ந்தனர்.

மத்திய பிரதேச சட்டசபையில் மொத்தம் 296 அங்கத்தவர்கள். இதில் காங்கிரஸ் 175 அர்களில் 36 பேர் விலகியதால் 139 பேர் காங்கிரஸ் கட்சியில் இருப்பர். எதிர்க்கட்சியில் இனி 157 பேர் இருப்பர்.

### தீர்மானம தோல்வி

மத்திய பிரதேச சட்டசபை கலைப்பது பற்றிய ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்று நேற்று இந்திய லோகசபையில் தோற்கடிக்கப்பட்டது.

சட்டசபையைக் கலைக்கும் கவர்னரின் முடிவு சட்டவிரோதமானது என எதிர்க்கட்சியினர் வாதாடினர்.

இதற்குப் பதிலளிக்கையில், ராஜ்ய முதல் மந்திரியின் ஆலோசனையை [illegible] வேண்டியதே [illegible] கடமை என்றும், கவர்னருக்கு மத்திய அரசாங்கம் எதுவித ஆலோசனையும் [illegible] உள்துறை மந்திரி திரு. சவான் அறிவித்தார்.

## நாட்டைவிட்டு வெளியேற 48மணிநேர அவகாசம்

புதுடில்லி, ஜூலை21

இங்குள்ள பாகிஸ்தான் தூதரகத்தைச்சேர்ந்த குமாஸ்தா ஒருவருக்கு நாட்டைவிட்டு வெளியேற 48 மணிநேரம்அவகாசம்கொடுக்கப்பட்டுள்ளது. உளவு பார்த்தார் என்ற குற்றச்சாட்டின்பேரில் இவரை நாட்டைவிட்டு வெளியேறும்படி அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது. பாகிஸ்தான் துணை ஹை கமிஷனரிடம் கொடுக்கப்பட்ட குறிப்பில், ராஜிய சலுகைகளையும், ராஜிய உறவுகளையும் குறிப்பிட்டநபர் மீறிவிட்டதாகத்தெரிவிக்கப் பட்டுள்ளது.

## வியட்னும் போரில் அமெரிக்க இழப்பு

சைகோன், ஜூலை 21

வியட்னும் போரில் அமெரிக்கா மொத்தம் 2,400 விமானங்கள், ஹெலிகொப்டர்களை வடவியட்னும்பிரங்கிளுக்கு இழந்துள்ளன.

சென்ற வருடத்தில், அமெரிக்கா 4,400 போர் வீரரை இழந்துள்ளது.

கடந்த ஆறரை மாதத்தில் மட்டும், 4,500 போர் வீரர் கொல்லப்பட்டனர். 35,000 அமெரிக்கப்போர் வீரர் காயத்துக்குள்ளாகினர்.

சென்ற வாரத்தில் 150 அமெரிக்கப் போர் வீரர் கொல்லப்பட்டனர்.

தென்வியட்னுமில் சென்ற வருடம் 2 லட்சம் அமெரிக்கப் போர் வீரர்இருந்தனர். இப்போது அத்தொகை4லட்சத்து 65ஆயிரமாக உயர்ந்துள்ளது.

## தமிழ் நாட்டிலிருந்து வரும் செய்திகள்

### வெங்கட்ராமனுக்கு அண்ணு புகழ்மாலை

சென்னை, ஜூலை 21

''அரசியலை இனிய இயல்புகளுடன் எப்படி நடத்திச் செல்லவேண்டும் என்பதை திரு. ஆர். வெங்கட்ராமனிடம் இருந்து மற்றவர்கள் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்.''

இவ்வாறு முன்னுள் காங்கிரஸ் தொழில் மந்திரி திரு. வெங்கட்ராமனை தமிழக முதல்வர் திரு. அண்ணுதுரை புகழ்ந்தார்.

திட்டக் கமிஷனின் அங்கத்தவராக நியமனம் பெற்ற காரணமாக மேல் சபையிலிருந்து செல்லும் எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமனுக்கு மேல்சபையில் பாராட்டுதல் நடந்தது. பல கட்சியினரும் கலந்து கொண்டு பாராட்டுரை வழங்கினுர்கள்.

### காரில் கடத்தல் கடிகாரங்கள்

### ரூ.44ஆயிரம பெறுமதி

சென்னை, ஜூலை 21

சென்னை பார்க்டவுண் பொன்னப்ப செட்டி தெருவைச் சேர்ந்த மோகன் லால் என்பவர் கடற்கரை ரேட்டில் ஒரு காரில் போய்க்கொண்டிருந்தார்.

சுங்க இலாகா அதிகாரிகளுக்கு அந்தக் கார்மீது சந்தேகம் ஏற்பட்டது. எனவே காரை விரட்டினுர்கள். சர்வகலாசாலைக் கட்டிடம் அருகே காரை மடக்கினுர்கள்.

காரைச் சோதனை போட்டபோது, உள்ளே ஏராளமான கடத்தல் கடிகாரங்கள் இருந்தன. அவற்றின் மதிப்பு 44 ஆயிரத்து 690 ரூபாய் அதிகாரிகள் காரையும், கடத்தல் கடிகாரங்களையும் கைப்பற்றினுர்கள்.

மோகன்லால்மீது வழக்குத் தொடரப்பட்டது. அவருக்கு ரூபா 2 ஆயிரம் அபராதமும், அபராதம் கட்டத் தவறினுல் 3 மாதம் கடுங்காவல் சிறைத்தண்டனையும் விதித்து நீதிபதி தீர்ப்புக் கூறினுர்.

### புரட்சி முறியடிப்பு

ஜாகர்த்தா, ஜூலை21

பதவியிழந்த சுகர்னேவை மீண்டும்பதவியிலேற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தராணுவப்புரட்சிமுறியடிக்கப் பட்டுவிட்டதா[ய்] அறிவிக்கப்பட்டது. தடைவிதிக்கப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சியே இந்தப் புரட்சியை நடாத்தி சுகர்னேவைப்பதவியிலேற்ற முயற்சித்ததாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருட்டு வழக்கு

## டிஸ்திரிக் கோர்ட்டுக்கு பாரம்

### இருவர் விடுதலை

வல்வெட்டித்துறை வெள்ளி

பருத்தித்துறை விநாயக முதலியார் வீதிக் கொள்ளை வழக்கில் குற்றம்சாட்டப்பட்டிருந்த மூன்று எதிரிகளில் இருவர் விடுதலைசெய்யப்பட்டு ஒருவர் மீதான வழக்கு மாவட்ட நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்தப்பட்டது. இவ்வருடம்மாசிமாதம் 6-ம் திகதி பருத்தித்துறை விநாயகமுதலியார் வீதியைச் சேர்ந்த பண்டாரம் கணபதிப்பிள்ளை என்பவரது வீட்டினுள் அத்துமீறிப் பிரவேசித்து 14,000 பெறுமதியான ரொக்கப்பணமும் நகைகளும் களவாடியதாக சி. செல்லன், ஆ. செல்லன், ஆ வேலாயுதம் ஆகிய மூவர் மீதும் பருத்தித்துறைப் பொலிசாரால் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராஜா முன்னிலையில் விசாரணைசெய்யப்பட்டது.

விசாரணை முடிவில் முதல் எதிரியானசெல்லனை 14,000 ரூபா களவாடியதற்கும், 803-30 சதம் வைத்திருந்ததற்குமாக மாவட்டநீதிமன்ற விசாரணைக்கு நிற்கும்படி உத்தரவிடப்பட்டது.

பிரம்மீ கேசரஞ்சன தைலம்

கண்சூடு, கண் எரிச்சல், தூக்கமின்மை, பீனிசம், தலைவலி, பல்வலி, தும்மல், முடி விழுதல், நரையுண்டாகுதல் முதலிய வியாதிகளை நீக்கி தலைமயிர் அழகான கருநிறத்தில் இடநெருக்கமாக வளரச் செய்கிறது. அகாலத்திலுண்டாகும் நரை மயிரை முன் போல் கறுப்புநிறமாக மாற்றுகிறது. இந்தத் தைலம் தொடர்ந்து பாவித்து வந்தால் 100 வயதானாலும் ''நரையும்'' ''வழுக்கையும்'' உண்டாகாது. நாரீமணிகள் செயற்கை முடிகளை வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படாது.

A 6 அவுன்ஸ் போ: 3-50

அதிக நரை மாற்றும் ஸ்பெஷல்

இந்த விசேஷத் தயாரிப்பிலும் மேலே சொன்ன எல்லாக் குணங்களும் அதேபடி அமைந்திருக்கிறது. கூடுதலான நரைமயிரை விரைவில் கருநிறமாக்கி வளரச்செய்யும்படி சக்திவாய்ந்த திவ்விய மூலிகைகளை பிரத்தியேகம் சேர்த்திருப்பதே இதன் முக்கியத்துவம்.

B 6 அவுன்ஸ் போ: விலை4-50

வடமாகாண ஏஜன்டுகள்:-

எஸ். சுப்பிரமணியம் & கோ, 53, கே. கே. எஸ். ரேட், யாழ்ப்பாணம்.

க. செ. கைலாசபிள்ளை & சன்ஸ், 76, பெரியகடை, யாழ்ப்பாணம்.

ஆ. இராசையா & சன்ஸ், 69, கே. கே. எஸ். ரேட், யாழ்ப்பாணம்.

தயாரிப்பாளர்கள்:-

எஸ். என். குரு மெடிக்கல் ஹால்
80 புதுச் செட்டித் தெரு
கொழும்பு-13

# 'இலங்கையில் ஜனநாயகம் பேச்சளவில்தான் இருக்கிறது'

## ஆண்டு விழாவில் சென். ஜோன்ஸ் கல்லூரி அதிபர்

குரும்பசிட்டி, வெள்ளி

'எல்லா நாடுகளிலும் ஜனநாயகம் முறையாக வர்ச்சி பெற்றதாக இல்லை. கிரேக்க நாடுகளில்தான் முதலில் ஜனநாயகவழி தோன்றியது இலங்கை, இங்கிலாந்து போன்ற தேசங்களில் பிரதிநிதிகள்தெரிவுமூலம் மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் தொடர்பு உண்டாகின்றது. ஆனால் உத்தியோகநியமனங்கள் கூட கிரேக்க தேசத்தில் மக்கள் தெரிவுமூலம் வழங்கப்படுகிறது. சகல மக்களும் உரிமை, கடமை உணர்ச்சிகளை அறிந்து நாட்டு முன்னேற்றத்திற்கு உழைத்தல் வேண்டும்.'

குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் 32-வது வருடாந்த விழாவுக்குத் தலைமை தாங்கிய யாழ் சென். ஜோன்ஸ் கல்லூரி அதிபர் திரு. க. பூரணம்பிள்ளை தமது தலைமையுரையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இவ்விழா நேற்று சன்மார்க்க சபை மண்டபத்தில் நடைபெற்றது. திரு. ஏ. ரி. பொன்னுத்துரை வரவேற்புரை நிகழ்த்தினர்.

திரு. பூரணம்பிள்ளை மேலும் கூறியதாவது:-

இஸ்ரேல் குறுகிய காலத்திற்குள் முன்னேற்றம் பெற எல்லா மக்களும் சமனுன உணர்ச்சிபெற்றிருந்தமையே காரணமாகும். இலங்கையில் ஜனநாயகம் பேச்சளவில் மட்டும்தான் இருந்து வருகிறது. நமது நாடு இலவசமாகவே சுதந்திரம் பெற்றுள்ளது. இந்தியாவில் உண்மையான தேசபக்தி கொண்ட மக்கள் தியாக போராட்டமூலம் சுதந்திரம் பெற்றனர். உலகில் சிறந்த ஜனநாயகம் நிலவும் நாடுகளில் நோர்வே, டென்மார்க் குறிப்பிடத்தக்கன. தற்போது தோற்றத்தில் மனிதர்களாகக் காணப்படுகின்றேமே தவிர மனித உலகத்திற்கு உதவக்கூடியவர்களாக வாழ்வோர் மிகக் குறைவு. சமூக சேவையில் ஈடுபடுவது கடவுள் சேவையாகும். சன்மார்க்க சபையினர் பல துறைகளிலும் கிராமத்தின் முன்னேற்றத்திற்கு உழைப்பதை ஏனைய கிராமத்தவர்களும் முன்மாதிரி எடுத்துக்காட்டாகக் கொள்ளுதல்வேண்டும்.

பண்டிதர் க. சச்சிதானந்தன், சைவப்புலவர் க. கணபதிப்பிள்ளை ஆகியோரும் இவ்விழாவில் உரை நிகழ்த்தினர். கலை நிகழ்ச்சிகளில் தாளவாத்திய கச்சேரியும், 'இறுதிப் பரிசு' ஓர் அங்க நாடகமும் இடம்பெற்றன.

வெடிவிபத்து

## இளம்பெண்ணும பலியானர்

யாழ்ப்பாணம், சனி

பண்டத்தரிப்பில் நடைபெற்ற வெடிவிபத்தில் சிக்கி படுகாயங்களுக்குள்ளான றஜினி என்ற 18 வயது இளம்பெண்ணும் மரணமானர். இவ் வெடி விபத்தில் காயமடைந்த மற்றொரு நபரான செபஸ்தியாம்பிள்ளை [45 வயது] ஏற்கனவே மரணமானர்.

றஜினியின் மரணம்சம்பந்தமாக திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. நா. இராசநாயகம் மரணவிசாரணை நடத்தினர். இவ் வெடிவிபத்தில் காயமடைந்த மற்றொருவரான றதி [7 மாதம்] யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றர். [ந. நி.]

## வைத்திய நிபுணரின் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாண செயலகசேம நலச் சங்கத்தின் ஆதரவில் தோல் மருத்துவ நிபுணர் டாக்டர் சிவசோதி 'சமூக மேகநோயும் சமூக நலனும்' என்னும் விஷயம் பற்றி 22-ம் திகதி சனிக்கிழமை ஒரு விரிவுரை நிகழ்த்துவார் இந் நிகழ்ச்சி கச்சேரி செயலக மண்டபத்தில்அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெறும்.

## 'மாணவர்களுக்கு அனுபவம் வேண்டும்''

உடுப்பிட்டி, வெள்ளி

''மக்களிடையே புத்துணர்ச்சிதோன்றினல்தான் சமூகம் முன்னேறும். சமூக மக்களிடையே பிளவு தோன்றினல் தீங்கு உண்டாகும். மாணவர்கள் தமது கல்வியில் மட்டும் அதிக சிரத்தை எடுப்பதால் பயனில்லை. மாணவர்களுக்கு உலகஅனுபவம் இன்றியமையாதது ஆகவே பொது விஷயங்களில் ஆர்வமுடன் ஈடுபடவேண்டும்.''

கரவெட்டி அத்துளுவயல் வெளியில் நடைபெற்ற கரவை வள்ளுவர் கலைமன்றத்தின் 5வது ஆண்டு கலைவிழாவில் பேசுகையில் வாணி கலைக்கழக இயக்குநர் பண்டிதர் க. வீரகத்தி கூறினர்.

இவ்விழாவுக்கு கரவெட்டி மேற்கு கிராமசேவையாளர் திரு. க. இரத்தினசிங்கம் தலைமைவகித்தார். திரு. செ. பாலசுப்பிரமணியம் உட்பட வேறு பலரும் பேசினர். கலை, கலாசார நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## 'பட்டினசபை ஆக்குக'

### உடுவில் கி. ச. தீர்மானம்

உடுவில், வெள்ளி

''உடுவில் கிராமசபையை பட்டினசபை அந்தஸ்துக்கு உயர்த்தவேண்டும்'' என்று கோரும் தீர்மானம் ஒன்று உடுவில் கிராமசபையின் மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

உடுவில் கிராமசபை மண்டபத்தில் கிராமசபைத் தலைவர் திரு. சி. முத்துலிங்கம் தலைமையில் கூடிய போதே மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கிராமசபையின் ஆறும் வட்டார அங்கத்தவர் திரு. ம. குமாரலிங்கம் புகையிரதவண்டியில் மோதுண்டு அகால மரணமடைந்ததற்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் கூட்ட ஆரம்பத்தில் இரு நிமிட நேர மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

## 'பஸ் சேவை'

உரும்பராய், வெள்ளி

உரும்பராயில் உள்ள இ. போ. ச. டிப்போவுக்கு வரும் பஸ்களும் டிப்போவிலிருந்து யாழ். பஸ் நிலையத்தை அடையும் பஸ்களும் உரும்பாராய்ச் சந்தியில் இருந்து தங்களது சேவையை ஆரம்பிக்கும்படியும் காலை ஆறு மணிக்கு டிப்போவில் இருந்து சுன்னகத்தை அடையும் சாவகச்சேரி - மானிப்பாய் சேவையை உரும்பராய்ச் சந்தியிலிருந்து ஆரம்பிக்கும்படியும் இ. போ. ச. பிராந்திய அதிகாரியை உரும்பராய் ... யினர் கேட்டுள்ளனர்.

## வேலைநிறுத்தம் தொடர்கிறது

உடுவில், வெள்ளி

இலங்கை ஸ்தலஸ்தாபன தொழிலாளர் சங்க யாழ்ப்பாண மாவட்ட உபதலைவரும், சுன்னுகம் கிளையின் தலைவருமான திரு. எஸ். முருகனை சுன்னுகம் பட்டின சபைத் தலைவர் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்ததை ஆட்சேபித்து மேற்படி பட்டினசபையின் நகர சுத்தித் தொழிலாளர் வேலைநிறுத்தம் இப்பொழுது தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

ஒரு வாரத்துக்கு மேலாக நடைபெற்றுவரும் இவ் வேலைநிறுத்தத்தில் சமரச அறிகுறிகள் தென்படுவதாக தெரியவில்லை.

## சந்தேகநபர் றிமாண்டில்

வல்வெட்டித்துறை, வெள்ளி

அல்வாய் வடக்கு வியாபாரி மூலையைச் சேர்ந்த திரு. கே. சிற்றம்பலம் வீட்டில் ஒருவரும் இல்லாத சமயத்தில் பூட்டை உடைத்து, வெள்ளித் தட்டுகள், பட்டுக் கம்பளங்கள், சேலை பணம் முதலியவற்றைத் திருடியதாக அதே ஊரைச் சேர்ந்த சபாரத்தினம், பாலசுப்பிரமணியம் ஆகிய இருவரையும் பொலிசார் சந்தேகத்தின்மீது கைது செய்து பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு கே. விக்னராஜா முன்னிலையில் ஆஜர்படுத்திய போது மாஜிஸ்திரேட் சந்தேகநபர்கள் இருவரையும் றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

## நன்கொடைப் பணமில்லை

உடுப்பிட்டி, வெள்ளி

வடமராட்சிப் பகுதியில் உள்ள வாசிகசாலைகள், சனசமூக நிலையங்களுக்குரிய நன்கொடைப்பணம் கடந்த ஒரு வருடகாலமாக அரசாங்கத்தால் வழங்கப்படவில்லையாம். முன்னர் கிராம சபைகளின் பொறுப்பில் இயங்கிவந்த வாசிகசாலைகள், சனசமூக நிலையங்களை அரசாங்கம் காரியாதிகாரியின் பரிபாலனத்தின் கீழ் மாற்றியதைத் தொடர்ந்தே இந்நன்கொடைப் பணம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாம்.

## மண்வெட்டி விநியோகம்

உரும்பராய், வெள்ளி

உரும்பராய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் இறக்குமதி செய்யப்பட்ட மண்வெட்டிகள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது. சங்கம் மூலம் விற்கப்படும் மண்வெட்டிகள் மற்றைய இடங்களிலும் பார்க்க 40 வீதம் விலை குறைவாகவுள்ளது.

## சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், சனி

திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் கோவில் சஹஸ்ர சங்காபிஷேகம் இம்மாதம் 26-ந்திகதி புதன்கிழமை நடைபெறுமென்றும், அன்று சனிபகவானுக்கு அஷ்டோத்தர சத சங்காபிஷகமும், மாலை விக்னேஸ்வரப் பெருமானின் ... தண்டிகை உற்சவமும் நடைபெறுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## ''குண்டு விழுந்ததும் ஓட்டம் பிடித்தேன்''

வல்வெட்டித்துறை, வெள்.

''குண்டு விழுந்ததும் எனது உடம்பு முழுவதும் இரத்தம் ஓடியது. உடம்பில் காயங்களும் இருக்கக் கண்டேன். உடனே அவ்விடத்தைவிட்டு ஓட்டம் பிடித்தேன்.'' என்று எஸ். பாலசுப்பிரமணியம் என்பவர் சாட்சியமளிக்கையில் கூறினர்.

இவ்வழக்கில் பருத்தித்துறையைச் சேர்ந்த எஸ் ஜெயராசா, எஸ். லெக்ஷமிகாந்தன் ஆகிய இருவரும் இவ்வருடம் சித்திரைமாதம் 25-ந்திகதி பருத்தித்துறைச் சந்தையில் வைத்து கைக்குண்டு வீசி எஸ். பாலசுப்பிரமணியம், வி. வைத்திதீஸ்வரன், எஸ். நேசராசா ஆகிய மூவருக்கும் காயம் விளைவித்ததாக பொலிசாரால் குற்றஞ்சாட்டியிருந்தது.

பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் நேற்றுமுன்தினம்விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

டாக்டர் என். விவேகானந்தன், வி. வைத்தீஸ்வரன், எஸ். நேசராசா ஆகியோரும் சாட்சியமளித்தனர். மேல் விசாரணை இம்மாதம் 30 ந்திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

## வயோதிபப்பெண் மரணத்தில் மர்மம்?

யாழ்ப்பாணம், சனி

சாவகச்சேரியைச் சேர்ந்த வரணியில் வசித்துவந்த வயோதிபப் பெண்ணெருவரின் மரணத்தின் மர்மத்தை அறிவதில் பொலிசார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். மாரி என்ற 5 வயது மாதுவே மரணமானவராவார்.

இரவில் வீட்டில் படுத்திருந்த இவ் வயோதிபப்பெண் காயங்களுடன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் கடந்த வெள்ளிக்கிழமை அனுமதிக்கப்பட்டு நேற்று மரணமானர். இம்மரணம் சம்பந்தமாக சாவகச்சேரி மாஜிஸ்திரேட்திரு. கே. விக்னேராஜா நேற்று ஸ்தலத்தில் விசாரணை நடாத்தினர். யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் மரணவிசாரணை செய்த மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் பிரேதபரிசோதனை செய்யுமாறு உத்தரவிட்டார். (ந. நி.)

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### ஞாயிறு 22-7-67

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 7-45 மெல்லிசை. 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்பஇசை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள். 5-30 மாணவர் மன்றம்.

6-15 வயலின்—ஜி. சண்முகாநந்தம், 6-45 கிராம சஞ்சிகை, 7-15 செய்திச் சுருள், 7-30 குங்குமம்—மாதர் நிகழ்ச்சி, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி. 9-30 கவிதைத் அரங்கு, 10-00 நேயர்விருப்பம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

யாழ்ப்பாண மாநகரசபை

### கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாண பொதுசன நூல் நிலையத்தின் முதல் தளத்திற்கு மின்கம்பி தைப்பதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 6-8-67-ம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன் எமக்குக் கிடைத்தல் வேண்டும்.

ஒரு வரிசைக் கேள்விப் படிவங்களின் கட்டணம் ரூ. 5/-ம், மீளப் பெறக் கூடியவைப்புப் பணமாக ரூ. 100/-ம் செலுத்தி 31 7-67-ம் திகதி பி.ப. 3-00 மணிக்கு முன் எம்மிடம் பெற்றுக் கொள்ளக்கூடிய தான படிவங்களிலேயே கேள்விகள் சமர்ப்பிக்கப்படல்வேண்டும்.

கேள்விகளுக்கான நிபந்தனைகள் கேள்விப் படிவங்களுடன் தரப்படும்.

ஹட்சன் செல்வராசா
மாநகர ஆணையாளர்.
மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
20-7-1967. 26

### அறிவித்தல்

புங்குடுதீவுமேற்குஅப்பாக் குட்டி சபாபதிப்பிள்ளை ஆகிய நான் யாழ்ப்பாண மாவட்டத்தில் தமிழ் நொத்தாரிசுவாகக் கடமைபார்க்க என்னை நியமிக்கும்படி இத் திகதி தொடக்கம் ஒரு மாதத்தின் பின் கொழும்பு பதிவுகாரியஸ்தர் தலைவர் அவர்கட்கு விண்ணப்பஞ் செய்ய விருக்கிறேனென்பதை இத்தால் அறிவிக்கிறேன்.

ஆ. சபாபதிப்பிள்ளை
25

### தேவை

மனேஜர்

அனலைதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு ஓர் மனேச்சர் தேவை. 31-7-67 க்கு முன் ஷை சங்க காரியதரிசிக்கு விண்ணப்பிக்கவும். தகைமைகள், S.S.C. தராதரம், கூட்டுறவு பயிற்சிச் சான்றிதழ். வயது 21 தொடக்கம் 40 வரையுள்ளவராயும் ரொக்கம் 1000/- ரூபாய் 2000 ரூபாய் ஆதனைப்பிணையும் செலுத்த தவேண்டும். சம்பளம் மாதம் 100/- ரூபாய்.

காரியதரிசி.
24

கயிற்றசிட்டி
கந்தன் துணை

சுவாமி

### அபேதானந்தாவுக்கு அழைப்பு

தன்னைக் காட்டவேண்டும். நான் உங்களைப் பார்க்க வேண்டும், எனது கிராமத்தில் எத்தனையோ பெரியார்கள் இருக்கிறார்கள் அவர்கள் என்னையும், உங்களையும் அறிந்துகொள்ளாதவர்களாக இருக்கிறார்கள். சிதம்பரம் யோகம் என் பெற்றோர். கோணனை மாவீரர் அபேதானந்தாவுக்கு இச்செய்தியை அறியும் அனைவரும் தெரிவிக்கவும்.

சி. செல்கல்வராயர்,
கைதடி மத்தி,
27 கைதடி.

வடப்குதிஅசைஸ்

### 17 வழக்குகள் விசாரணை

யாழ்ப்பாணம், சனி

வடபகுதி அசைஸ் நிதிமன்றத்தின் இரண்டாவது பருவகால விசாரணைக்கு இதுவரை 17 வழக்குகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவற்றுள் 11 கொலைவழக்குகளும், 5 கொலை முயற்சி வழக்குகளும், 1 கள்ள நோட்டு வழக்கும் அடங்கியுள்ளன.

இரண்டாவது பருவகால விசாரணை நீதியரசர் வி. மாணிக்கவாசகர் முன்னிலையில் இம்மாதம் 31ம் திகதி காலை ஆரம்பமாகும். அ.நி.

சினிமா விமர்சனம்

# அன்பே வா!

எங்கும் பனிமழைக்குளிர்ச்சி. நீலமலைகள் பசும் தரைகள் ஓங்கிவளர்ந்த மரங்கள் வர்ணஜாலப் பூங்கொடிகள் இப்படி இயற்கை அழகெல்லாம் கொட்டிக் கிடக்கும் ஒரு பிரதேசத்தில் அமைந்த அழகான பங்களாவில் ஒரு வாட்டசாட்டமான இளைஞனும் கவலையேயில்லாத யுவதியும் சந்தித்தால் அந்தப் பிரதேசம் எவ்வளவு சௌந்தர்யமாக மாறும் என்பதை அறிந்து கொள்ளாதவர்களுக்கு 'அன்பேவா' ஒரு நல்ல அனுபவமாக இருக்கிறது.

எம். ஜி. ஆரை எப்படியெல்லாம் பார்க்க ரசிகர்கள் விரும்புவார்களோ அப்படியெல்லாம் காண்பதற்கு 'அன்பேவா' ஒரு நல்ல வாய்ப்பு. சில கட்டங்களில் ஆங்கில நடிகர் ரெக்கட்சனை நினைவுக்குக் கொண்டு வருகிறார்.

மலைபோன்ற மனிதனைக் கலங்கவைக்கும் கட்டத்தில்நம்மை மலைக்கவைக்கும் எம். ஜி. ஆர் மலைச்சாரலில் சரோஜாதேவியோடு காதல் செய்யும்போது எம். ஜி. ஆருக்கு எத்தனை வயது என்ற கேள்வியை மீண்டும் எழுப்பிவிடுகிறார். இளமை தளராத உடல் கட்டை கோர்ட்டும் சூட்டும் கட்டிப் பிடித்து அழகைக் கொட்டச் செய்கின்றன.

சரோஜாதேவியின் உடலமைப்பு அவர் அணியும் ஆடைகளுக்கெல்லாம் வளைந்து கொடுக்கிறது. 'டுவன்டியத் பெசஞ் சரி பொக்ஸ்' கிளியோபாத்ரா படத்தில் எலிசபெத் டெய்லர் விதம்விதமான உடை அணிந்து வருவதாக பிரமாதமாக நினைத்துக்கொண்டிருப்பவர்கள் சரோஜா தேவி 'அன்பேவா'வில் அணிந்து வரும் உடைகளைப் பார்த்தால் அதை ஒரளவு மறக்கவேண்டித்தான் இருக்கும். துடிப்பு தவிப்பு வெட்கம் வேதனை எல்லா உணர்ச்சிகளையும் கொட்டி நடிக்கிறார் படத்தின் தரத்துக்கு தனது பங்கை சரியாகச் செலுத்தியிருக்கிறார்.

நாகேஷின் ஏமாற்றுவித்தைகள் எம், ஜி. ஆருடனேயே சண்டைக்கு தயாராகும் கட்டங்கள் பார்த்துச் சிரிக்கலாம். ஜோடி மனோரமாதான். 'ராஜாவின் பார்வை ராணியின்பக்கம்' பாட்டு ஓய்ந்தபின்பும் ரசிகர்களின் குரல்கள் ஓயமறுக்கின்றன.

வர்ணம் கண்களை நிறைக்கிறது. தமிழ்ப்படத்தயாரிப்பாளர்கள் இவ்வளவு தூரம் முன்னேறிவிட்டார்களா! பெருமையாகத்தானிருக்கிறது. ஜெமினிலபோரோட்டரீஸார்தான் 'கலர்' வேலையை செய்திருக்கிறார்கள்.

திரைப்பட ரசிகர்களின் பொழுது போக்குக்காக இவ்வளவு அக்கறை எடுத்த ஏ. வி. எம். ஸ்தாபனத்தாரும் டைரக்டர் திருலோகசந்தரும் பாராட்டுக்குரியவர்களே.

இப்படம் இப்போது யாழ்ப்பாணம்'வெலிங்டன்' திரையில் ஓடிக்கொண்டிருக்கின்றது — 'கணேஷ்'

## வரி விளம்பரம்

### வைத்தியம

தொய்வு, கசம், நீரிழிவு, இரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் பரிபூரணானந்தர், J. P., கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### சோதிடம்

பிரபல சோதிடம் சாதக பலன் ரூபா 3-00, ரேகைப் பலன் ரூபா 2-00, ஆருட பலன் ரூபா 1-00, S. சிவகுருநாதன் 160 அரசடி ரோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். 2512

## யாழ்ப்பாணத்தில் ஆகஸ்ட் 6-ல் ரசிப்பான ஹாக்கி போட்டிகள் ஆரம்பம்

### இந்திய 'பாலமண்டல்' கோஷ்டியுடன் இலங்கை கோஷ்டிகள் மோதுகின்றன

யாழ்ப்பாணம், சனி

வட இந்தியாவிலிருந்து இலங்கைக்கு விஜயஞ்செய்திருக்கும் 'பால்மண்டல்' ஹாக்கிக் கோஷ்டி எதிர் வரும் 5ந் திகதி யாழ்ப்பாணம் வருகிறார்கள். இக் கோஷ்டியினர் 6ந் திகதி யாழ். விளையாட்டரங்கில் யாழ்ப்பாணம் பாடசாலை தெரிவுக் கோஷ்டியுடன் முதன்முதலாகமோத இருக்கின்றனர்.

இக்கோஷ்டியினர் தொடர்ந்து 7ந் திகதி யாழ். தெரிவுக் கோஷ்டியுடனும், 8ந் திகதி ஊவா தெரிவுக்கோஷ்டியுடனும், 9ந் தேதி அகில இலங்கைத் தெரிவுக்கோஷ்டியுடனும் முறையே மோத இருக்கின்றனர் இச்சினேகிதபூர்வமான போட்டிகள் தினமும் 5 மணியளவில் யாழ். விளையாட்டரங்கில் நடைபெற இருக்கின்றன.

இந்தியக் கோஷ்டியின் காப்டன் குருகுஸ்சிங். இவர் பாங்கொக் நகரில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்திய விளையாட்டுக் கோஷ்டியில் அங்கம் வகித்தவராவர். இந்தியாவுக்கும் ஜப்பானுக்கும் இடையே நடைபெற்ற ஹாக்கிப் போட்டியில் இந்தியக் கோஷ்டியின் காப்டனாக இருந்து திறமையாக ஆடினார்.

சங்கர் லக்ஷமணன்: இவர் இக்கோஷ்டியின் கோல் காப்பு வீரராகும். பாங்கொக் நகரில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்திய ஹாக்கிக் கோஷ்டியின் காப்டனாக இருந்தவர். இப்போட்டியில் இக்கோஷ்டி தங்கப் பதக்கத்தைப் பெற்றது.

[6-ம் பக்கம் பார்க்க]


## இப்பொழுது திரையிடப்படுகிறது

| | |
|---|---|
| கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை] | காமினி [மருதானை] |
| ராஜ் [நீர்கொழும்பு] | வெலிங்டன் [யாழ்ப்பாணம்] |
| விஜயா [மட்டக்களப்பு] | ஸ்ரீ கிருஷ்ணா [திருமலை] |

தென்னகமெங்கும் வெற்றி எட்டுத்திக்கு மெட்ட கொட்டுமுரசு கொட்டி 100 நாட்களுக்கு மேல் ஓடிய எழில் வண்ண ஓவியம்!

புதுமை நிறைந்த பொழுதுபோக்குச் சித்திரம்

மக்கள் திலகம் எம். ஜி. ஆர்.—சரோஜாதேவி
அசோகன் - நாகேஷ் - மனோரமா - ராமதாஸ்
ரி. ஆர். ராமச்சந்திரன் - மாதவி
நடித்த



ஏவி எம். புரொடக்ஷன்ஸ்

# அன்பேவா

(ஈஸ்ட்மென் கலர்)

கதை, டைரெக்ஷன்: ஏ. ஸி. திரிலோகசந்தர்
இசை: மெல்லிசை மன்னன் எம். எஸ். விஸ்வநாதன்

ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA.
தினசரி 2-30, 6-30, 9-45
பேயர்தினங்களில் 4காட்சிகள்
கண்ணதாசன்
கே. ஆர். விஜயா
நடித்த
கறுப்புப்பணம்

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
ஜெய்சங்கர்
எல். விஜயலெட்சுமி
நடித்த
இருவல்லவர்கள்

மனோஹரா
[யாழ்ப்பாணம்]
தினசரி 4-45, 7-00, 9-45
MEIN KAMPF
(The war crimes of Adolf Hitler)

REGAL - JAFFNA
Time: 4-30, 7-00 p. m.
9-45 p. m.
Tony Randall
Barbara Eden
in
The Brass Bottle

கும்பாபிஷேக தேவைகளுக்கு
தேவையான
## அஷ்டபந்தன மருந்து

* கோவில் அபிஷேகம், திருவிழாக்கள்
* திருமண விழாக்கள்
* புதுமனைப் பிரவேசம்
* புதுமனைக்கு அத்திவாரமிடல்

ஆகிய வைபவங்களுக்குத் தேவைப்படும் அபிஷேகத் திரவியங்கள், கஸ்தூரி, குங்குமப்பூ, கோரோசனை, புனுகு, ஜவ்வாது, விளைவுகூடம், சாம்பிராணி, ஊதுபத்தி, வாசனைதிகள், பன்னீர், அத்தர், நவரத்தினம், பஞ்சலோகம் முதலிய சகல சாமான்களும்
மற்றும்
சந்தனம், குங்குமம், சாந்துப்பொட்டுகள் ஆகியவைகளும் தங்கள் திருப்திக்கேற்ற வகையில் மலிவாக எம்மிடம் கிடைக்கும்.

* மயில் மார்க் சந்தன வில்லைகள்
* சுகந்த சந்தனப் பவுடர்
நறுமணம் கமழும்
* சந்தனக் குழம்பு
[உடன் யந்திரத்தினல் அரைத்தது]
எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம்

## எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

[மருந்து, மருந்துச்சரக்கு வாசனைதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்.]

53, கே. கே. எஸ். ரோட். பெரியகடை, யாழ்ப்பாணம்.
''பாலேந்திரா பில்டிங்'' 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.
போன்: 541 Residence: 7068


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிமா மீண்டும் பதவிக்கு வந்தால்
# மாவட்ட சபை இருக்காது
# இலங்கை-இந்திய ஒப்பந்த சட்டமும் கிழிக்கப்படும்
## காலி மகாநாட்டில் சிறிமாவே கூறினார்

காலி, வியாழன்

**தாங்கள் ஆட்சிக்கு வந்ததும மாவட்ட சபைகளை ஒழித்துவிடுவதாக வும, இலங்கை - இந்திய ஒப்பந்தச் சட்டத்தை சிதைத்துவிட்டு புதிய மசோதா கொண்டுவருவரென்றும திருமதி சிறிமா பண்டாரநாயகா இன்று காலைகாலியில் ஆரமபமான சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பதினைந்தாவது ஆண்டு மகாநாட்டுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் தெரிவித்தார்.**

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பதினைந்தாவது ஆண்டு மகாநாடு இன்று காலியில் பூஸா குதிரைப்பந்தய அரங்கில் கோலாகலமாக ஆரம்பமானது. சுதந்திரக்கட்சி எம். பி.க்களும் பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

சமஷ்டிக்கட்சி இந்த அரசாங்கத்தில் அங்கம் வகிப்பதால் பிரதேச சபைகளோ, மாவட்டசபைகளோ வேறு என்ன சபைகளோ அமைத்து அதன்மூலம் நாட்டைப் பிரித்து தமது நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள வேண்டுமென்பதே அவர்கள் இலட்சியமாக இருக்கிறது. அவர்களுடைய நிர்ப்பந்தத்துக்குப் பணிந்து மாவட்ட சபைகள் அமைக்க நாம் விட்டுக்கொடுக்கக்கூடாது. இந்த நாட்டின் தேசீய ஐக்கியத்திலும் தேசியஒருமைப் பாட்டிலும் அக்கறை உடைய எவரும் மாவட்ட சபைகள் அமைக்கும் முயற்சியை இறுதிவரைஎதிர்த்தே தீரவேண்டும்'' என்று திருமதி பண்டாரநாயக்கா சொன்னார்.

### இலங்கை- இந்திய ஒப்பந்தம்

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின்படி ஐந்தேகால்லட்சம் இந்தியர், இந்தியா செல்லவேண்டுமென்றும் ஆனல் இப்போது நிறைவேற்றப்பட்டிருக்கும் சட்டத்தின்படி அவர்கள்செல்ல மாட்டார்களென்றும் மாவட்டசபைகளும் அமைக்கப்பட்டால் அவர்கள் இங்கேயே உரிமையுடன் வாழ்வார்களென்றும் திருமதி பண்டாரநாயகா சொன்னார்.

### சிறுபான்மையினர் ஒத்துழைப்பு

சிறுபான்மை இனத்தவர்கள் இந்த நாட்டுப் பெரும்பான்மைச் சமூகத்தவர்களின் நல்லெண்ணத்தையும் நல்லுறவையும் பெற்று அவர்களின் ஒத்துழைப்புடனும், உதவியுடனும் அவர்களுடன் ஒற்றுமையாகத்தான் வாழமுடியுமென்றும் அப்படித்தான் வாழவேண்டுமென்றும் திருமதி சிறிமா கூறினார்.

## கொலை

கிளிநொச்சி, வெள்ளி

வவுனிக்குளம் மூன்றுமுறிப்பைச்சேர்ந்தவரும் புங்குடுதீவைச் சொந்தஇடமாகக் கொண்டவருமான குமாரு நல்லையா (வயது 35) தாக்கப்பட்ட நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லும் வழியில் மரணமானார்.

இதுசம்பந்தமாக கிளிநொச்சிப்பகுதி திடீர்மரண விசாரணை அதிகாரி திரு.மு. யோகலிங்கம் மரணவிசாரணை நடாத்தினார். காலஞ்சென்றவருடன் சென்றதாகக் கூறப்படும் வைத்திலிங்கம் செல்லத்தம்பி சாட்சியமளிக்கையில், தாங்கள் இருவரும் அம்பலவாணர் என்பவரின் கடைக்குச் சென்று திரும்புகையில் நாகலிங்கம் சின்னத்துரை என்பவர் காட்டுக்குள்ளிருந்து ஒரு கொட்டனுடன் ஓடிவந்து இருவரையும் கும்பிடக் கும்பிடத் தாக்கியதாகவும் பின் இருவரும் மயக்கநிலையில் இருக்கவே விட்டுச்சென்றதாகவும் கூறினார்.

பணத்தகராறுதான் இதற்குக் காரணம் என விசாரணையில்தெரிவிக்கப்பட்டது. மரணவிசாரணை அதிகாரி கொலை எனத் தீர்ப்புக்கூறி, தலைமறைவாய் இருக்கும் நா. சின்னத்துரையைகைது செய்யும்படியும் தொடர்ந்து புலன்விசாரணை செய்யும்படியும் கிளிநொச்சிப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

கிளிநொச்சிவைத்திய அதிகாரி திரு. வீ. எச். சுந்தரசிங்கம் பிரேதபரிசோதனை நடாத்தினார்

## மீண்டும வாரண்ட்

வவனியா,வெள்ளி

வவுனியா உதவி பொலிஸ் அதிகாரிக்கு மீண்டும் இரண்டாம்தடவையாக வாரண்ட் பிறப்பிக்கப் பட்டுள்ளது. அத்துடன் முதல் தடவை பிணை எடுத்தவர்களின் பிணைப்பணமான 12,000 ரூபாவும் அடுத்த தவணைக்கு எதிரியைக் கொண்டு வராவிட்டால்பறி முதல் ஆகும்என்ன வவனியா மாஜிஸ்திரேட் திரு. ஆர். பரமகுரு தெரிவித்தார்.

இவ்வழக்கில் பார்வதி என்ற பதினெட்டு வயது இளம் பெண்ணுடன் தகாத முறையில் நடந்து கொண்டதாக வவனியா உதவிப் பொலிஸ் அதிகாரி பெரேரா மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

எதிரியான பெரேராமுதல் தடவை கோர்ட்டிற்கு வராமல் வாரண்ட் பிறப்பிக்கப் பட்டு கோர்ட்டில் புறக்டர் மூலம் வெளிப்பட்டு பின் பிணையில் சென்றிருந்தார். பின் மறு தவணைக்கு வராததால் மாஜிஸ்திரேட் வாரண்ட் பிறப்பித்தார். அதன்பின் மறு தவணைக்கும் எதிரி வராததால் மாஜிஸ்திரேட் பிணையாளரிடம், எதிரி மறு தவணைக்கு வராவிட்டால் பிணைபறிமுதலாகும்எனக்கூறி வழக்கை இம்மாதம் 27ம்திகதிக்கு ஒத்திவைத்தார்.

## வவனியாவில் தாச்சிப்போட்டி

வவனியா, வெள்ளி

வவனியாவில் விரிந்த அடிப்படையிலான ஒரு தாச்சிப்போட்டி மிக விரைவில் நடக்கவிருக்கிறது. வவனியா மாவட்டம் முழுவதிலும் தெரிவுப்போட்டிகள் மூலம் வீரர்கள் தெரிவு செய்யப்பட்டு இறுதிப் போட்டி நடைபெறும். இதில் வவனியா அரசாங்க அதிபர், விளையாட்டுத்துறை மந்திரி ஆகியோர் பிரசன்னமாயிருப்பர். இதற்கான ஆயத்தங்களை விளையாட்டுப் பகுதிப்போதனசிரியர் திரு. என். ஜே. சவுந்தரநாயகம் செய்துவருகிறார்.

## தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, வியாழன்

இன்று மாலை கொழும்பில் இழுக்கப்பட்ட 151-வது தேசிய சுவீப்பின் முடிவுகள் வருமாறு:

முதலாவது பரிசு
33 G 0439 - ரூ. 100,000

இரண்டாவது பரிசு
41 Z 0675 - ரூ. 40,000

மூன்றுவது பரிசு
41 X 0729 - ரூ. 10,000

தலா ரூ. 1251-10 பரிசு பெறும் 100 டிக்கட்டுகள் வருமாறு:

| | |
|---|---|
| 36 L 0666 | 15 T 0914 |
| 52 B 0038 | 03 L 0102 |
| 18 M 0779 | 53 M 0930 |
| 26 H 0738 | 41 F 0468 |
| 55 O 0274 | 17 V 0953 |
| 40 Q 0598 | 48 V 0445 |
| 52 N 0488 | 34 K 0389 |
| 55 Y 0615 | 26 L 0104 |
| 34 Y 0311 | 32 U 0153 |
| 35 U 0189 | 18 Q 0648 |
| 36 Q 0237 | 43 C 0110 |
| 45 T 0799 | 59 O 0588 |
| 23 V 0967 | 11 X 0408 |
| 36 N 0793 | 57 V 0187 |
| 11 A 0467 | 58 L 0190 |
| 19 L 0612 | 50 H 0905 |
| 08 H 0978 | 34 E 0647 |
| 08 E 0520 | 57 T 0656 |
| 21 S 0245 | 06 F 0177 |
| 21 C 0489 | 15 C 0591 |
| 38 A 0884 | 39 R 0637 |
| 28 M 0331 | 37 F 0528 |
| 06 C 0808 | 38 Z 0353 |
| 44 O 0117 | 17 E 0480 |
| 20 E 0114 | 44 B 0955 |
| 23 K 0200 | 41 K 0182 |
| 04 F 0392 | 19 Q 0892 |
| 38 Z 0279 | 10 J 0900 |
| 48 Y 0690 | 08 B 0291 |
| 56 J 0371 | 39 R 0068 |
| 54 D 0018 | 26 W 0495 |
| 33 L 0490 | 17 Q 0510 |
| 33 S 0473 | 17 J 0468 |
| 38 M 0267 | 31 L 0111 |
| 28 F 0791 | 06 J 0197 |
| 13 M 0909 | 34 T 0220 |
| 35 Q 0497 | 60 S 0277 |
| 53 D 0705 | 35 F 0787 |
| 21 A 0610 | 01 E 0564 |
| 01 Q 0073 | 02 N 0788 |
| 47 G 0304 | 48 C 0768 |
| 25 Q 0976 | 37 V 0133 |
| 40 Z 0680 | 13 N 0100 |
| 33 Y 0432 | 20 A 0467 |
| 15 K 0393 | 05 T 0232 |
| 17 Z 0733 | 28 R 0458 |
| 10 Z 0386 | 36 H 0746 |
| 19 S 0168 | 26 X 0597 |
| 27 E 0735 | 34 C 0051 |
| 23 X 0659 | 15 W 0254 |

[இவை உறுதிப்படுத்தப்பட வேண்டியவை]

வவனியா

## தமிழ் வித்தியாலய இல்லப்போட்டிகள்

வவனியா, வெள்ளி

வவனியா தமிழ்மகாவித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டிகளில் பாரதி இல்லம் முதல்இடத்தையும், புகழேந்தி இரண்டாவது இடத்தையும், இளங்கோ மூன்றுவதுஇடத்தையும் பெற்றன.

யாழ் கல்விஅதிகாரி திரு. சி ஏ. சிவஞானம் தலைமையில் போட்டிகள் நடைபெற்றன. விசேஷ விருந்தினராக திரு. பி. ஈ. இராசேந்திரம் கலந்துகொண்டார்.

## ஓமந்தையில் பெறலாம்

வவனியா,வெள்ளி

ஓமந்தைப்பகுதியில் உள்ள விவசாயிகளின் நீண்டகாலக் குறையைவவுனியாமாவட்ட விவ்சாய விசாலிப்பு உத்தியோகத்தர் திரு. பொ. மாணிக்கவாசகர் தீர்த்து வைத்துள்ளார். இப்பகுதி விவசாயிகளுக்குத் தேவையான விவசாய அபிவிருத்திச் சாமான்களையும் மற்றும் உதவிகளையும் [illegible] வவனியாசென்றே [illegible] வந்தனர். இம்மாதம் தொடக்கம் ஓமந்தை விவசாயிகள் தமது தேவைகளை ஓமந்தையிலுள்ள விவசாய [illegible]

## மின்சாரம தாக்குண்டு மரணம

கிளிநொச்சி, வெள்ளி

கடமையில் கவனம் செலுத்திக் கொண்டிருந்தபோது தொழிலாளி ஒருவர் மின்சாரத்தால் தாக்குண்டு, துடிதுடித்து மாண்ட சம்பவம் ஒன்று இன்று நண்பகல் பரந்தனில் நடந்துள்ளது.

பரந்தன் ரசாயன தொழிற்சாலையில் கடமையாற்றிய என். பெனடிற் (வயது 26 என்பவர் கடமை செய்யும் போது மின்சாரத்தினால் தாக்குண்டு மரணமானார்.

திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு. எம். யோகலிங்கம் கிளிநொச்சி பொலிசாரின் உதவியுடன் விசாரணை செய்தார்.

## மனைவியுடன் சச்சரவு பின் தற்கொலை

கிளிநொச்சி, வெள்ளி

மனைவியுடன் சச்சரவுப் பட்ட கணவன், உடனடியாக கிணற்றில் விழுந்து தற்கொலை செய்துகொண்ட சம்பவம் கிளிநொச்சியைச் எசர்ந்த ஜெயந்திபுரத்தில் நடந்துள்ளது.

31 வயதான முருகேசு மகேசுவரன் என்பவர், மனைவியுடன் வாக்குவாதப்பட்டதாகவும், அதன்பின் கிணற்றில் குதித்தார் என்றும், விசாரணையின்போது தெரிய வந்தது.

திடீர் மரணவிசாரணை அதிகாரி எம். யோகலிங்கம் மரணவிசாரணை நடத்தினார். டாக்டர் சூசைப்பிள்ளை பிரேத பரிசோதனை செய்தார். எம். பேரம்பலம், சரஸ்வதி, வெள்ளைச்சாமி ஆகியோர் சாட்சியமளித்தனர். விசாரணையின்பின் மரண விசாரணை அதிகாரி தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

## துப்பாக்கி...

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

பொட்டலங்களை எடுத்து கடலில் வீசியும் கைகளாலும், கம்புகளாலும் தாக்கினார்களாம். தாங்கள் உண்மையாகவே மீன்பிடிக்கச் சென்றதாகவும், தாங்கள் ஒருபோதும் கள்ளக்கடத்தலிலோ, அன்றி கள்ளத் தோணியோ இல்லையென்று கூறியும் அவர்கள் தொடர்ந்து தாக்கினார்களாம். பின்னர் வள்ளத்தையும் வல்வெட்டித்துறை சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைத்தனராம்.

வல்வெட்டித்துறை சுங்க அதிகாரிகளால் இவர்கள் விசாரணை செய்யப்பட்ட பின் விடுதலை செய்யப்பட்டனர்.

## யாழ்ப்பாணத்தில்...

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

மற்றும் விக்டர் சைமன், குருச்சரன்சிங்போதி, முக்லபன்சிங், விஞெட்குமார், ஜெஜிற்சிங், ஹமிக்சிங், பல்பியர்சிங், பல்பியர்சிங் றன்ஹவா, இன்ரர்சிங், உஸ்மன்ஹன், வி. ஜே. பீற்றர், முனியசயிற், பதியுதீன், மொகின்ரர்லால், ஜனி மொகிதீன், மதன்மோகன் சிங், பனுண்டங், பால்தேசிங் ஆகிய உலகப் புகழ்பெற்ற வீரர்கள் கலந்துகொள்கின்றூர்கள்.

## ஓய்வு பெறுகிறார்?

உரும்பராய், வெள்ளி

உரும்பராய் இந்துக்கல்லூரியில் தற்போதைய அதிபர் திரு. ஏ. வைத்திலிங்கம் ஓய்வு பெறவிருக்கிறாரெனத் தெரிகிறது. அவர் இளைப்பாறும்போது மேற்படி கல்லூரியில் காலியாகும் அதிபர் பதவிக்கு தற்போதைய உப அதிபரும் ஓர் சிரேஷ்ட ஆசிரியரும் விண்ணப்பித்திருக்கிறார்களாம்.

## பதவிஉயர்வுடன் இடமாற்றம்

யாழ்ப்பாணம், புதன்

கோப்பாய் பகுதிக்காரியாதிகாரியாகக் கடமையாற்றிய திரு. வேதாரணிய சேயோன் உதவி அரசாங்க அதிபராகப் பதவி உயர்வு பெற்று மன்னருக்குச் சென்றுள்ளார். (ந. நி.)

## உண்ணாவிரதம்

கொழும்பு, வியாழன்

கொலைக் குற்றம் ஒன்றின் மீது மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்த ஜயசேன என்பவர் போகம்பரைசிறையில் தூக்குமேடையைஎதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார் ஆனல் அவர் இப்பொழுது சென்ற மூன்று தினங்களாக உண்ணாவிரதம் இருந்துவருகிறார். தம்மைப்பார்க்கவந்து கொண்டிருந்த தமது உறவினர் ஒருவருக்கு அனுமதி மறுக்கப்பட்டதுதான் அவர் உண்ணாவிரதம் இருக்கக் காரணமாம்.

இவருக்கு அனுதாபமும் ஆதரவும் தெரிவித்து இரட்டைக்கொலைக் குற்றத்தின் மீது மரணதண்டனை விதிக்கப்பட்ட மற்றொரு கைதியான கனகரத்தினம் என்பவரும் இப்போது உண்ணாவிரதம் இருந்துவருகிறார்.

## முதன் மந்திரிகளுடன் ஆலோசிக்கப்படும்

புதுடில்லி, ஜூலை 20

இலங்கையிலிருந்து தாய்நாடு திரும்பும் இந்தியர்களைக் குடியமர்த்துவதற்கான பூர்வாங்க திட்டமொன்றைத் தயாரிப்பதற்காக கேரளம், மைசூர், ஆந்திரா, சென்னை ஆகிய ராஜ்ய முதன்மந்திரிகளின் மகாநாடொன்றைக் கூட்டி ஆலோசிக்க விருப்பதாகவும் அந்தமானில் இவர்களைக் குடியமர்த்துவது சாத்தியமில்லையெனவும் மத்திய அரசாங்க தொழிலாளர் நல மந்திரி தெரிவித்தார்.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால்யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலவீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம்ஆண்டு ஜூலை மாதம் 22-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org